செ.வெ.எண்: 422/2020 நாள்: 29.10.2020

## பத்திரிக்கை செய்தி

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள 2372 வாக்குச் சாவடி மையங்களில் பாழடைந்த மையங்களை மாற்றம் செய்தல், வாக்குச் சாவடி பெயர் திருத்தம் செய்தல் தொடர்பாக இன்று (29.10.2020) மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. கிருஷ்ண்மூர்த்தி, அனைத்து வட்டாட்சியர்கள், தேர்தல் துணை வட்டாட்சியாகள் மற்றும் அனைத்து கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மேலும், மாவட்ட ஆட்சியரக வளாக தரை தளத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு கிடங்கு அனைத்துக் கட்சி பிரதிநிதகள் முன்னிலையில் திறக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நேரில் ஆய்வு செய்து பார்வையிடப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்தமுள்ள 2372 வாக்குச் சாவடிகளில் 46 வாக்குச் சாவடிகள் இடம் மாற்றம் செய்யவும், 7 வாக்குச் சாவடிகளின் பெயர் திருத்தம் செய்யவும் கண்டறியப்பட்டு அனைத்து கட்சி பிரதிநிதியினருக்கும் பிரதிகள் வழங்கப்பட்டது. மேற்கண்ட வாக்குச் சாவடிகளைத் தவிர வேறு மையங்கள் மாற்றம் செய்யவோ அல்லது மையத்தின் பெயர் திருத்தம் செய்யவோ கட்சி பிரதிநிதியினரால் கண்டறிந்து தெரிவிக்கும் பட்சத்தில் அது குறித்து மாநில தேர்தல் ஆணையம் மூலம் பரிசீலனை செய்யப்பட்டு முடிவான வாக்குச் சாவடி மையங்கள் அறிவிக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

| வரிசை எண் | சட்டமன்ற தொகுதி | மையம் மாற்றம் | பெயர் திருத்தம் | மொத்த வாக்குச் சாவடிகள் |
|---|---|---|---|---|
| 1 | 062 செங்கம் (SC) | 6 | - | 323 |
| 2 | 063 திருவண்ணாமலை | 2 | - | 296 |
| 3 | 064 கீழ்பென்னாத்தூர் | 3 | - | 285 |
| 4 | 065 கலசப்பாக்கம் | 8 | - | 281 |
| 5 | 066 போளுர் | 18 | 4 | 285 |
| 6 | 067 ஆரணி | 1 | - | 311 |
| 7 | 068 செய்யாறு | 5 | - | 311 |
| 8 | 069 வந்தவாசி (SC) | 3 | 3 | 280 |
| **மொத்தம்** | | **46** | **7** | **2372** |

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.